
அருள்மிகு வீரட்டேஸ்வரர்
திருக்கோயில், வழுவூர்.



T.N. Olaganathan

தல வரலாறு

வழுவூர் கோயில் வரலாறு

திரு.மா.செல்வராஜ் அவர்கள், தலைவர்,
நெய்குப்பை.

அறங்காவலர் குழு உறுப்பினர்கள்

திரு.மங்கை.மு.சங்கர், D.M.E., அவர்கள்
திரு.த.ராஜலிங்கம் அவர்கள்
திரு.சா.லெட்சுமணன் அவர்கள்
திரு.கோ.வேலாயுதம் அவர்கள்

திரு.S.இராமலிங்கம் அவர்கள்
செயல் அலுவலர்

தேவஸ்தான வெளியீடு
ஜனவரி 2000

விலை ரூ.20/-

அன்பளிப்பு:
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

உள்ளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்க எண்
1.	Vazhuvur Temple History	3
2.	கோயிலும் இருப்பிடமும்	5
3.	தலத்தின் பெயர்கள்	6
4.	கோயிலின் அமைப்பு	6
5.	தலப் பெருமை	7
6.	வீரட்டானம்	8
7.	கஜசம்கார வரலாறு	9
8.	தினப் பூஜையும் திருவிழாக்களும்	10
9.	கல்வெட்டுக்கள்	11
10.	புராண வரலாறுகள்	14
11.	சிற்பச் சிறப்புகள்	15
12.	நிர்வாகம்	16

73-4

VAZHUVUR TEMPLE HISTORY

GODDESS ILANGILAI NAYAKI, SRI VEERATESWARAR SWAMY TEMPLE

Vazhuvur, Mayiladuthurai Taluk.

Thiru Vazhuvur Veerattam is one of the Eight Veerattams. The eight places where Lord Siva's adventures are exhibited are known as Eight Veerattams. One among them where the killing of Elephant (Gaja Samharam) took place was Thiru Vazhuvur.

This Ancient temple is situated near Mayiladuthurai in Nagapattinam District. It is in between Mayiladuthurai and Mangainallur, next to Elenthangudi at Neykuppai, Vazhuvur is 1 k.m. West from here.

This temple is mentioned in Thevaram. The killing of elephant, Gaja Samharam, is mentioned in Thirunavukkarasar and Thirugnana Sambandar's poems.

Gaja Samharamurthy is the speciality of the temple. The important deity is Sri. Veratteswarar. He is also known as Krithivasar since he killed the elephant and wore the skin.

About 48,000 saints, performed thabas here, and got the blessing of God. It has Great Punya Brahma Holy places. Amavasai day is a very sacred day. People visit this temple, dip in temple tank to get the blessings of God.

The main deity of this temple is called Arulmigu Veeratteswarar and Krithivasar. Goddess is Ilangilai Nayaki. Gaja Samhara Murthy is standing and dancing on the head of the elephant, wearing the

skin of the elephant. Next to God, stands Goddess with Lord Muruga in her hands. Esana Theertham is very special here. The Holy tree is (Sthala Virusham) Devadaru and Vanni.

The saints and woman saints of Dharugavanam were very proud and thought they were all powerful. Lord Siva as Pitchadanar and Lord Thirumal as beautiful Mohini came to Dharugavanam to kill their proud attitudes. ***IYANAR*** *was born. The saints got angry and wanted to destroy. They sent a mad elphant to kill Lord Siva. Lord Siva as Pitchadanar entered the stomach of the elephant, and came out danced. The saints realized their mistake. They prayed to Lord Siva and got his blessings.*

Vazhuvur Temple is situated in the middle of the village. It has five stage Gopuram and 4 Prakarams.


It has inscriptions of II Raja Rajan, III Gulothungan, II Rajathi Raja Thevan and Vijayanagar King Veerapokkanna Udayar.

The Kumbabishekam was performed in 1941 and 1967 with the help of Sri Sankarachariyar Swamigal.


Six Kala Poojas are performed. Amavasai Theertham is very famous. During Masi Maham temple celebrates the Gaja Samhara Event.

The temple is under the Control and administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Department, Chennai.

❖ ❖ ❖ ❖ ❖



தி.ந.உலகநாதன்
22.7.2000



அருள்மிகு இளங்கிளை நாயகி
(இடுப்பில் முருகப்பெருமானை கொண்டு விளங்கும் அரிய காட்சி)

வழுவூர்க் கோயில் வரலாறு

கோயிலும், இருப்பிடமும் :

தென்னாடாகிய தமிழ்நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், வைணவக் கோயில்கள், எனப் பல பிரிவுகள் அடங்கும். சிவன் கோயில்களில் சைவ சமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற 274 தலங்களும், தேவாரப் பதிகங்களில் பெயர் மாத்திரம் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்களும், பிற்காலத்தில் தோன்றிய அபிமானத் தலங்களும் உள்ளன. இவைகளில் தேவாரம் பாடிய மூவர்களாலும், பதிகங்களில் பெயர் மட்டும் குறிக்கப் பெற்றவை வைப்புத் தலங்கள் எனப்படும்.

சிவபெருமானது வீரச் செயல்கள் வெளிப்பட்ட எட்டுத் தலங்களை அட்ட வீரட்டங்கள் எனக் கூறுவர் ஆன்றோர். அவற்றுள் கஜ சம்காரம் நிகழ்ந்த வீரட்டத் தலமாக விளங்குவது திருவழுவூராகும். இத்தலம் நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை–திருவாரூர் சாலையில் நெய்க்குப்பையில் இறங்கி மேற்கே 1 கி.மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். இவ்வழியில் நிரம்ப பேருந்துகள் உள்ளன. கோயில் வாசலுக்கே செல்லும் டவுன் பஸ் நம்பர் 36. புகை வண்டியில் வருவோர், மயிலாடுதுறையில் இறங்கி வரவேண்டும்.

தலத்தின் பெயர்கள் :

இத்தலத்திற்கு வழூவூர் என்னும் பெயர் வழங்குகின்றது. பிரளய காலத்தில் உலகமெல்லாம் அழிந்தும், இவ்வூர் அழியாமல் வழுவின காரணத்தாலும், ருத்ர பீஜம் இவ்விடத்தில் வழுவினதாலும், வழூவூர் வழுவை என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணம் அறிவிக்கின்றது. வடமொழியில் ச்யுதபுரி என்று சொல்லப்படுகிறது. பல தலங்களில் நடுவில் மேலான கைலாசம் போன்று விளங்குவதால் பரகைலாசம் என்றும், தன்னை அடைந்தவர்களுக்குச் சிவஞானத்தை அருள்வதால் ஞான பூமி என்றும், அண்டப் பிரம்மத்தலம் என்றும் பல பெயர்களில் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுகளில் வழுகூர் என்று காணப்படுகிறது. வடமொழி புராணத்தில் பிப்பலாரண்யம் என்று சொல்லப்படுகிறது.

கோயிலின் அமைப்பு :

கோயில் பெரிய கோயில். ஊருக்குச் சற்று பள்ளத்தில் உள்ளது. முன்னே பெரிய கோபுரம் கிழக்கு நோக்கி உள்ளது. சுமார் 150 அடி உயரத்தில் 5 நிலைகளைக் கொண்டு உள்ளது. கோபுரத்தைத் தாண்டிச் சென்றால் ஈசான தீர்த்தம் என்ற திருக்குளம் உள்ளது. சுவாமி, அம்மன் சந்நிதிகள் தனித்தனியே கிழக்கு நோக்கி உள்ளன. கோயிலின் உள்ளே இருந்து வெளி மதில் வரையில் 4 பிரகாரங்கள் உள்ளன. தலத்திற்குரிய மரம் தேவதாரு மரம். அம்மன் சந்நிதிக்கு பின்னே வன்னி மரம் உள்ளது.

தலப்பெருமை :

கஜசம்கார மூர்த்தியைச் சிறப்பாகக் கொண்ட தலம். இத்தலத்தில் சுவாமி சுயம்பு மூர்த்தியாய் விளங்குகிறார். வீரட்டத்தலங்களில் மூல லிங்கம் வீரட்டேசுவரர் என்ற பெயரால் வழங்கப்படுதல் போல இத்தலத்திலும் சுவாமி வீரட்டேசுவரர் என்ற பெயரால் வழங்கப்படுகிறார். யானையை உரித்து அதன் தோலைப் போர்த்தருளிய சிறப்பால் கிருத்திவாசேஸ்வரர் என்ற சிறப்புப் பெயருடன் பெருமான் விளங்குகிறார்.

கஜசம்கார நடனம் நவ தாண்டவத்தில் ஊர்த்துவ தாண்டவமாகப் போற்றப்படும் நடனசபைகளில் ஞானசபை எனக் கூறப்படும். **நாற்பத்தெட்டாயிரம்** மகரிஷிகள் இத்தலத்தில் தவம் செய்து ஞானோதயம் பெற்றனர் எனக் கூறப்படுகிறது. இத்தலத்தில் பஞ்சப் பிரம்ம மகாபுண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. மேற்கில் சத்தியோசாத தீர்த்தமும், வடக்கில் வாமதேவ தீர்த்தமும், கிழக்கில் தற்புருட தீர்த்தமும், தெற்கில் அகோர தீர்த்தமும், பெருமானுக்கும் நந்திக்கும் இடையில் ஈசானம் அல்லது சிவ பாதாளகங்கையும் உள்ளன. முகமோசனம் வித்யா தீர்த்தம், திரிவர்க்கம், ஞானாம்ருதம் முதலிய தீர்த்தங்களும் இருக்கின்றன.

அமாவாசை தோறும் சுவாமி சந்நிதியில் உள்ள தீர்த்தத்தில் சுவாமி தீர்த்தங் கொடுத்தருளுகிறார். **அந்நாளில் இத் தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடுவோர்க்கு புத்ரதோஷம் நீங்கி நன்மகப்பேறு வாய்த்து வருகிறது.** திருமண தடை உள்ளவர்களுக்கு திருமணம் முதலியன நடைபெற்று வருகின்றன. இந்த வழிபாடு இன்றளவும் நடைபெற்று வருகிறது என்பது அனுபவ சித்தம்.

மூர்த்திகள் :

விநாயகர் – அருள்மிகு செல்வ விநாயகர், சுவாமி பெயர் அருள்மிகு வீரட்டேசுவரர், அருள்மிகு கிருத்திவாசேசுவரர் என்பனவாகும். அம்பாள் பெயர் அருள்மிகு இளங்கிளை நாயகி என்பதாகும். வடமொழியில் பாலாங்குராம்பிகை என்பர். இங்குள்ள இம்மூர்த்தி போல வேறு கோயில்களில் கஜசம்கார மூர்த்தியைக் காணமுடியாது. திருவடியை யானையின் தலைமேல் ஊன்றி அதன் தோலைக் கிழித்துப் போர்க்கும் நிலையில் பெரிய திருவுருவத்தோடு கஜசம்கார மூர்த்தி விளங்குகிறார். அருகில் முருகப்பெருமானை இடுப்பில் கொண்டு விளங்கும் உமையம்மை அச்சத்தோடு நிற்கிறார். பெருமான் உமையஞ்ச யானையை உரித்ததை இத்திருவுருவத்தில் காணலாம். ஆலிங்கனமூர்த்தி, பிட்சாடனமூர்த்தி, மோகினித் திருவுருவங்களும் தரிசிக்கத்தக்கன. முருகப்பெருமானுக்கு தனி சந்நதி உள்ளது.

சிதம்பர ரகசியப் பிரதிஷ்டைபோல இங்கும் கஜசம்கார மூர்த்திக்குப் பின்னால் யந்திர பிரதிஷ்டை உள்ளது. தீர்த்தங்களில் சுவாமி சந்நிதிக்கு எதிரே உள்ள ஈசான தீர்த்தம் அல்லது பாதாள கங்கை விசேடமானது. தலமரம் தேவதாரு, வன்னி.

வீரட்டானம் :

சிவபிரானது வீரச்செயல்கள் விளங்கும் எட்டுத் தலங்கள் என்னும் பொருளில் வீர+அட்ட+தானம் என இப்பெயர் பிரித்துப் பொருள் கூறப்படுகிறது. வீரட்டானம் என்பதை வீரட்டம் எனச் சுருக்கியும் வழங்குவர். எட்டு வீரட்டங்களைப் பின்வரும் பாடல் தொகுத்துக் கூறுவதைக் காணலாம்.

"பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம்அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன்கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே"

அட்ட வீரட்டங்களில் திருக்கண்டியூர் – பிரமன் தலையைக் கொய்தது, திருக்கோவிலூர் – அந்தகாசுரனைக் கொன்றது, திருவதிகை – திரிபுரம் எரித்தது, திருப்பறியலூர் – தக்கன் தலையைக் கொய்தது, திருவிற்குடி – சலந்தராசுரனைக் கொன்றது, **வழுவூர்** – யானையை உரித்தது, திருக்குறுக்கை – காமனை எரித்தது, திருக்கடவூர் – எமனை உதைத்தது.

கஜசம்கார வரலாறு :

தாருகாவனத்து முனிவர்கள் தாமே தவ ஞானிகள் எனவும், தாம் செய்யும் நற்கருமங்களே பலனைத் தரும் எனவும், இதற்குக் கடவுள் துணை தேவையில்லை எனவும் கருதிச் செருக்கினர். அவ்வாறே முனிபத்தினியரும் தாங்கள் கற்பிற் சிறந்தவர்கள் எனவும், தங்கள் கற்பின் ஆற்றலால் எதையும் சாதிக்கலாம் எனவும் கருதித் தருக்கினர். அவர்கள் கர்வத்தையும் செருக்கையும் அழிக்கக் கருதிய சிவபிரான் பிக்ஷாடனராகவும், திருமால் மோகினியாகவும் அழகிய வடிவு கொண்டு தாருகாவனம் வந்தனர். முனிவர்கள் மோகினியைக் கண்டும், முனிவர் மனைவியர் பிக்ஷாடனரைக் கண்டும் தந்நிலை அழிந்தனர். பெருமான் மோகினியோடு கூடி ஐயனாரை (சாஸ்தா) பெற்றெடுத்து மறைந்தார்.

முனிவர்கள் சிவபெருமான் செய்த தெயலைக் கண்டு அவர்மீது கோபம் கொண்டு ஆபிசார வேள்வி செய்து அதில் வந்த அக்னி, புலி, மான், மழு, பாம்பு, முயலகன் ஆகிவற்றை

சிவபெருமான் மீது ஏவினர். பெருமான் அவற்றை ஆபரணம் முதலானவையாக அடக்கியதை அறிந்த முனிவர் கடைசியாக மதயானையை வேள்வித் தீயிலிருந்து தோற்றுவித்துப் பெருமான் மீது ஏவினர். பிக்ஷாடனர் உருவில் வந்த பெருமான் யானையின் வயிற்றுக்குள் புகுந்துவிட்டார். உலகம் இருள்கிறது. அம்பிகை ஐயனைக் காணாது அஞ்சினாள். பெருமான் யானையின் வயிற்றிலிருந்து கலக்கக், கொல்லவந்த யானை வலிதாங்க முடியாமல் இத்தலத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள சத்யோசாத தீர்த்தத்தில் விழுந்து, தென்மேற்கு மூலையில் உள்ள தீர்த்தத்தில் கரையேறும் சமயம் பெருமான் யானையின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிபட்டு வீரநடனம் புரிந்தருளினார். அம்பிகை கையிலிருந்த குழந்தை முருகன் தன் தந்தையை ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்ட அனைவரும் கண்டு பெருமானது சினந்தணியுமாறு வேண்டி வழிபட்டு நன்மைகள் பலவும் பெற்றனர். உயிர்கள் ஆணவ மலத்தால் கட்டுண்டு மயங்கிச் செருக்குவதையும் பெருமான் அம்மலத்தைப் போக்கி உயிர்கட்கு நல்லருள் புரிவதையும் இப்புராண வரலாற்றின் தத்துவமாகக் கூறுவர்.

தினப்பூஜையும் திருவிழாக்களும் :

இத்தலத்தில் உள்ள பெருமானுக்கும், பிற மூர்த்திகளுக்கும் தினந்தோறும் விடியற்காலை – காலை – உச்சிமாலை இரண்டாம் காலம் – இரவு ஆகிய காலங்களிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. இரண்டாம்காலத்துக்கும், இரவுக்கும் நடுவேளையில் யந்திர பிரதிஷ்டைக்கு பூஜை நடைபெறும்.

ஆண்டில் ஆறுமுறை, சித்திரை மாதம் திருவோண நாளிலும், ஆனி உத்திரத்திலும், ஆவணி, புரட்டாசி மாதங்களில் சதுர்தசி நாளிலும், மார்கழியில் திருவாதிரை நாளிலும், மாசி சதுர்தசி

தினத்திலும், கஜ சம்ஹாரமூர்த்திக்கும், நடராஜபெருமானுக்கும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் அபிஷேகங்கள் நடைபெறும். மாசிமாதம் மகநாளில் பௌர்ணமி அன்று உதயகாலத்தில் பெருமான் கஜசம்ஹாரம் செய்து நடனக் காட்சித் தருவான். மார்கழி திருவாதிரை நாளிலும் உதயகாலத்தில் கோயிலுக்குள் கஜ சம்ஹார நடனம் நிகழும். திருவாதிரைக்கு முதல் நாளில் புனர்பூசத்தில் கஜ சம்ஹாரமூர்த்தி வெண்மை அலங்காரத்துடன் காட்சியளிப்பார். பிற மாதங்களில் ஆனித் தரிசன விழாவும், ஆடிப்பூர விழாவும், நவராத்திரி விழாவும், கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சுவாமி புறப்பாடும், தீபக்காட்சியும், மார்கழியில் திருவாதிரை விழாவும், தைமாதம் மாட்டுப்பொங்கல் விழாவும் அந்தந்த மாதங்களில் நடைபெறும்.

கல்வெட்டுக்கள் :

இத்தலத்தைப் பற்றிய 15 கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டுப் பகுதிகளில் 1912வது ஆண்டில் 418 முதல் 432 வரையில் உள்ள எண்களில் சர்க்காரால் நகல்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களால் கோயிலைப் பற்றிய பல செய்திகள் தெரியவருகின்றன. அக்காலத்தில் இவ்வூர் **வழுகூர்** என்றும், இவ்வூர்ப் பகுதி திருவிழந்தூர் நாடு என்றும், அது ஜயங்கொண்ட சோழவளநாட்டைச் சேர்ந்ததென்றும், பெருமானின் பெயர் வீரட்டானம் உடையார் – **வழுவூர் நாயனார்** என்றும், கோயிலில் விளக்கு இடுவதற்கும், பூஜைக்கும், திருவெம்பாவை ஓதுவதற்கும், பொருள் வழங்கியிருப்பதும், கோபுரம் மதில் முதலியன அழகப்பெருமாள் பிள்ளையால் கட்டப்பட்டதென்றும், பிறத் திருப்பணிகள் செய்யப்பட்ட விவரங்களும் தெரியவருகின்றன.

கல்வெட்டுச் செய்திகள் வருமாறு :

1. 418 – 1912 வீரட்டானேஸ்வரர் கோயிலின் தென்சுவரில் பரகேசரிவர்மன் இரண்டாவது ராஜ ராஜ தேவ சோழனது 11வது ஆண்டில், ஜயங்கொண்ட சோழவளநாட்டைச் சேர்ந்த திருவிழந்தூர் நாட்டில் உள்ள வழுகூர் வீரட்டானம் உடையார்க்கு விளங்கிடுவதற்குப் பொருள் வழங்கியது.

2. 419 மேற்கண்ட அரசனது 15–வது ஆண்டில் 27.9.1160 செவ்வாய்க்கிழமை ஆயில்ய நாளில், குந்தவைத்தேவியின் நினைவாக ஆற்காடு கூற்றத்தைச் சேர்ந்த சித்தர்காட்டில் இருந்த ஒருவரால் விளக்குகள் எரிப்பதற்குப் பணம் தானம் செய்தது.

3. 420. மேற்படி தென்சுவரில் 3வது குலோத்துங்க சோழனது 3வது ஆண்டில் வழுவூர் நாயனார் பூஜைக்காக மூலங்குடியிலுள்ள ஒருவரால் நிலம் கொடுக்கப்பெற்றது.

4. 421. மேற்படி சுவரில் 2வது ராஜாதிராஜா தேவ சோழனது 5வது ஆண்டில் 1.7.1167 சனி நாளில், கோயிலில் திருவெம்பாவைப் பாடல் பாடுவதற்கும், மார்கழித் திருவாதிரை, பங்குனி விழா முதலியன நடைபெறுவதற்கும் பொருள் வழங்கப் பெற்றது.

5. 422. விஜய நகர மன்னன் வீரபொக்கண்ண உடையார் காலத்தில் சகம் 1324–ல் காவிரி வெள்ளத்தால் நஷ்டமடைந்த நிலங்களுக்குத் தீர்வை அனுகூலம் செய்தது.

6. 423. மேற்படி இடத்தில் மதுரை, ஈழம் கருவூர்களைக் கொண்ட திரிபுவன வீரதேவ சோழனது 33–வது ஆண்டில் (1178–1216) ஓர் பிராமணப் பெண்ணால் பொருள் வழங்கியது.

7. 424. மண்டபத்தின் மேல் சுவரில் விஜய நகர மன்னன் இரண்டாவது பிரதாப தேவராயனின் காலத்தில், சகம் 1356–ல் கோயிலில் புதுத் திருப்பணிகள் செய்யப்பட்டுக் குளமும் வாய்காலும் வெட்டப்பட்டது.

8. 425. 3–வது ராஜேந்திர சோழ தேவனது 2–வது ஆண்டில் விளக்கிடுவதற்குப் பொருள் அளித்தது.

9. 426. மண்டபத்தின் வடசுவரில், பாண்டிய மன்னன் ஜடா வர்மன் சுந்தரபாண்டியனது 6–வது ஆண்டில் (30.12.1276) கோயிலைச் சேர்ந்த வீட்டின் வாடகை வசூல் செய்யப்பெற்றது.

10. 427. மேற்படி சுவரில், 3–வது குலோத்துங்க சோழனது 2–வது ஆண்டில் (15.5.1180) வியாழன் திருவோண நாளில் சூரத்தூர் நாட்டைச் சேர்ந்த மோடப்பாக்கம் ஊர்வசியால் விளக்கிவிடுவதற்குப் பொருள் வழங்கியது.

11. 428. மேற்படி சுவரில் 2–வது ராஜாதி ராஜா தேவ சோழனது 15–வது ஆண்டில் 18.8.1177 வியாழன் ரோகிணி நாளில் திருவாரூர்க் கூற்றத்தைச் சேர்ந்த தீயன் குடிவாசியால் வீரட்டானம் உடையார்க்கு விளங்கிடுவதற்கு நிலம் வாங்கப் பொருள் வழங்கியது.

12. 429. சுவாமி கோயிலின் முதல் பிரகாரத்தில், வடபுறத்துத் தாழ்வாரத்தில் 3–வது குலோத்துங்கச் சோழனது 5–வது ஆண்டில், கோயிலின் வடபுறத்தில் அம்மன் கோயில் கட்டப்பட்ட செய்தியும், கோயில் பூஜைக்கு நிலம் வாங்கப் பொருள் கொடுத்த விவரமும் உள்ளன.

13. 430. கோபுரவாயிலின் இருபக்கங்களிலும், இருங்கொளப் பாண்டி நாட்டைச் சேர்ந்த நல்லாவூர் கணபதி நாயனார் பிள்ளை மகன் அழகப் பெருமாள் பிள்ளையால் கோபுரமும் மதிற்சுவரும் கட்டப்பட்ட விவரம் உள்ளது.

14. 431. மேற்கண்ட கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் மேற்படி அழகப்பெருமாள் பிள்ளையால் பிட்சாடன மூர்த்தியின் உருவச்சிலை வழங்கப்பெற்ற விவரம்.

15. 432. இவ்வூரின் தோப்பில் உள்ள ஓர் கல்துண்டில், வளவராய குப்பத்திலுள்ள கூட்டத்தார்களால் கோயிலுக்கு நிலம் தானம் செய்யப்பட்டது.

மேற்கண்ட கல்வெட்டுக்களால் கோயிலைப் பற்றியும், மூர்த்திகளைப்பற்றியும், இத்தலத்துக்குப் பக்கத்திலுள்ள நாடு ஊர்களைப்பற்றியும் அக்காலத்து மன்னர்களைப் பற்றியும் கோயிலுக்குத் தானம் செய்யப்பட்ட பல தருமங்களைப்பற்றியும் பல விவரங்கள் தெரிய வருகின்றன.

புராண வரலாறுகள் :

இத்தலத்தைப்பற்றிய பெருமைகளும், வரலாறுகளும், வேதவியாசர் வடமொழியில் இயற்றிய சிவமகாபுராணத்தில் ஈசான சம்ஹித்தையிலும், ஸ்ரீ பத்ம புராணத்திலும், ஸ்கந்தபுராணத்திலும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஈசான சம்ஹிதை 30 அத்தியாயங்களைக் கொண்டது, இவைகள் தேவஸ்தானத்தில் அச்சாக்கப்பட்டுள்ளன.

இவைகளில் அடங்கிய வரலாறுகளாவன :

கோமதிக் கரையில் உள்ள வசிட்டர் முதலிய முனிவர்கள் சூதமுனிவரிடம் சிவபுராணத்தைக் கேட்டது. கஜாசுரன் உற்பத்தியும், சம்ஹாரமும், வழுவூர்ப் பெயர்க்காரணம் ஏற்பட்டது. பிரமன் படைப்புத் தொழிலைக் குறித்து தவம் செய்தது, ஈசானம் முதலிய 5 தீர்த்தங்களை ஏற்படுத்தியது. பெருமான் தோன்றி காட்சியளித்தது. பிப்பலாரண்யப் பெருமை, கண்ணபிரானுக்கு

அருள் செய்தது. விக்ரமசோழன் சனி தேவனால் துன்புறுத்தப்பட்டு வழுவூரை அடைந்து அருள் பெற்றது. சனி தேவன் பெருமானை வழிபட்டது. கல்மாஷப்பாதச் சோழன் வழுவூர்ப் பெருமானை வழிபட்டு அருள் பெற்றது. பஞ்ச வனங்கள் சூழப்பெற்றது. ஓர் அந்தணனின் தாய் ஹைமவதி என்பவள் சிவத்தியானம் செய்து அருள் பெற்றது. சம்புசர்மா என்பவன் தேவியைப் பூஜித்து அருள் பெற்றது, வீரசோழன் ஆராதித்தது, தேவதாருவனத்தில் உள்ள முனிவர்கள் கருமம் ஒன்றே முக்திக்குச் சாதனம் என்றெண்ணி வந்தபோது அவர்களுக்குப் பெருமான் பிக்ஷாடன ரூபங்கொண்டு ஞான உபதேசம் செய்யச் சென்றது, முனிவர்கள் பெருஞ்சேரியில் ஆபிசாரயாகம் செய்து பல உயிர்ப்பொருள்களை வரச் செய்து பெருமானிடம் ஏவுவது, பெருமான் தன் பெருஞ் சக்தியால் அவைகளை அடக்கி முனிவர்களுக்கு அருள்வது முதலியன. இவ்வரலாறுகளில் சில சுருக்கமாய்க் கூறப்படும்.

சிற்பச் சிறப்புகள் :

கோயிலுக்கு முன்னே உள்ள கோபுரம் 5 நிலைகளுடன் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோபுரமும் மதிலும் அழகப் பெருமாள்பிள்ளை என்பவரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. நூற்றுக்கால் மண்டபத்தில் உள்ள தூண்கள் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. பேரளம் சொக்கு முதலியார் என்பவரால் கொலுமண்டபம் அமைக்கப்பட்டது. சுவாமி சந்நிதிக்கு முன்னே உள்ள சிறு மண்டபத்தில் ஒரே லிங்கத்தில் 1000 சிறு லிங்கங்கள் அமைக்கப்பெற்ற. சகஸ்ரலிங்கம் உள்ளது. உற்சவச் சிலைகளில் கஜ சம்ஹாரர், பிட்சாடனர், அம்மன் சிலைகள் அழகிய தோற்றத்துடன் விளங்குகின்றன. கஜ சம்ஹார மூர்த்தியின் ஊர்த்துவ நடனக் காட்சி உள்ளங்கால் தெரியும் வண்ணம்

தூக்கியிருப்பது பார்க்குந் தோறும் பக்தியை உண்டாக்குகின்றது. அம்மன் கையில் முருகன் குழந்தையாகக் காட்சி தருகின்றான். (இந்தக் காட்சி வேறு எந்த ஸ்தலத்திலும் காணமுடியாது). கோயிலின் மத்தியிலுள்ள ஈசானம் தீர்த்தம் என்னும் திருக்குளம் சுற்றிலும் படித்துறைகளுடன் அழகாக அமைந்துள்ளது. பெருமான் கோயில் பிரகாரத்தில் புராண வரலாற்றுக்களைக் குறிக்கும் சித்திரங்கள் சுவரில் எழுதப்பெற்றுள்ளன. (மிகப் பழமை வாய்ந்த ஓவியமாக கருதப்படுகிறது).

நிர்வாகம் :

இந்து சமய அற நிலையத்துறையால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

திருவழுவூர்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியன

அடைவுத்திருத் தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர்வீ ரட்டானம் காமருசீர் அதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி.
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச்சென்றால்
நமன்தமரும் சிவன்தமரென்றகல்வர் நன்கே.

திருச்சிற்றம்பலம்

க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
உருத்திர கோடி மறைகாட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல்மீ யச்சூர் வைகா
வேதீச்சரம் விவீச்சரம் வெற்றி யூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காண லாமே.

திருச்சிற்றம்பலம்

அட்டவீரட்டங்களைக் குறித்துத்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருக்ஷேத்திரக்கோவை

அட்டான மென்றோதிய நாலி ரண்டும்
அழகன்னுறை காவனைத்தும் துறைகள்
எட்டாம் திருமூர்த்தியின் காடொன்பதும்
குளம்மூன்றும் களம்அஞ்சும்பாடி நான்கும்
மட்டார் குழலாள் மலைமங்கை பங்கன்
மதிக்கும் இடமாகிய பாழிமூன்றும்
சிட்டானவன் பாசூரென்றே விரும்பாய்
அரும்பாவங்களாயின தேய்ந்தறவே.

சிவபெருமான் யானையை உரித்துப் போர்த்ததைக் குறிக்கும் தேவாரப்பாடல்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியன

திருச்சிற்றம்பலம்

திருஅரசிலி **பியந்தைக்காந்தாரம்**

ஏறு பேணிய தேறிஇளமதக் களிற்றினை எற்றி
வேறு செய்ததன் உரிவை வெண்புலால் கலக்கமெய் போர்த்த
ஊறு தேனவன் உம்பர்க் கொருவன்நல் லொளிகொள்ஒண்சுடராம்
ஆறு சேர்தரு சென்னி அடிகளுக் கிடம்அர சிலியே.

திருப்புறவம் **தக்கேசி**

உரவன் புலியின் உரிதோ லாடை உடைமேல் படநாகம்
விரவி விரிபூங் கச்சா அசைத்த விகிர்தன் உகிர்தன்னால்
பொருவெங் களிறு பிளிற உரித்துப் புறவம் பதியாக
இரவும் பகலும் இமையோர் ஏத்த உமையோ டிருந்தானே.

திருக்கண்ணார்கோயில் **குறிஞ்சி**

தருவளர் கானம் தங்கிய துங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்ச உரித்து மறைநால்வர்க்கு
உருவளர் ஆல நீழ லமர்ந்தீங் குரை செய்தார்
கருவளர் கண்ணார் கோயிலடைந்தோர் கற்றோரே.

திருவூறல் **வியாழக்குறிஞ்சி**

மத்த மதக்கரியை மலையான்மகள் அஞ்சஅன்று கையால்
மெத்த உரித்த எங்கள் விமலன் விரும்புமிடம்
தொத்தலரும் பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர் நீலம் நாளும் நயனம்
ஒத்தல ருங்கழனித் திருவூறலை உள்குதுமே.

திருஅண்ணாமலை **நட்டபாடை**

ஒளிறூபுலி யதளாடையன் உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்இரா வணனை
அளறூபட அடர்த்தானிடம் அண்ணாமலை யதுவே.

திருநாவுக்கரசர் அருளியன

திருச்சேறை **திருநேரிசை**

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

திருப்பயற்றூர் **திருநேரிசை**

உரித்திட்டார் ஆனை யின்தோல் உதிரஆ றொழுகி ஓட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி விரல்விதிர்த் தலக்கண் நோக்கித்
தரித்திட்டார் சிறிது போது தரிக்கில ராகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத் திருப்பயற் றூர னாரே.

பொது **திருவிருத்தம்**

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணா துன்பாதம்இறைஞ்சு கின்றார்
அருவினைச் சுற்றம் அகல்வி கண்டாய் அண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப் பிளந்துவேய்த் தோளி அஞ்சப்
பருவரைத் தோலுரித் தாய்எம்மை ஆளும் பசுபதியே.

பொது திருநேரிசை

பழகனை உலகுக் கெல்லாம் பருப்பனைப் பொருப்போ டொக்கும்
மழகளி யானையின் தோல் மலைமகள் நடுங்கப் போர்த்த
குழகனைக் குழவித் திங்கள் குளிர்சடை மருவ வைத்த
அழகனை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்த வாறே.

திருவதிகை திருத்தாண்டகம்

மாலாகி மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனின் உரிவைகொண்டு
மேலாலும் கீழாலும் தோன்றா வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே
கோலாலம் படவரைநட்டு அரவு சுற்றிக்
குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலாலம் உண்டிருண்ட கண்டத் தானே
அவனாகில் அதிகைவீ ரட்டனாமே.

சிதம்பரம் திருக்குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ

திருவதிகை காந்தாரம்

சூழும் அரவத் துகிலும் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவள் அஞ்ச அஞ்சா தருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும் விரிபொழில் வீரட்டம் சூழ்ந்து
தாழும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை

சுந்தரர் அருளியன

திருக்காளத்தி — நட்டராகம்

மறிசேர் கையினனே மத மாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல் செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக் குந்திருக் காளத்தியுள்
அறிவே உன்னைஅல்லால் அறிந் தேத்த மாட்டேனே.

திருநரையூர் — குறிஞ்சி

அளைப்பை அரவேர் இடையாள் அஞ்சத்
துளைக்கைக் கரித்தோல் உடையான் இடமாம்
வளைக்கை மடவார் மடுவில் தடநீர்த்
திளைக்கும் நறையூர்ச் சித்தீச் சரமே.

திருநாகேச்சுரம் — பஞ்சமம்

குன்ற மலைக்குமரி கொடி யேரிடை யாள்வெருவ
வென்றி மதகரியின்உரி போர்த்ததும் என்னைகொலாம்
முன்றில் இளங்கமுகின் முது பாளை அமுதளைந்து
தென்றல் புகுந்துலவும் திரு நாகேச் சரத்தானே.

தங்கிய மாதவத்தின் தழல் வேள்வியி னின்றெழுந்த
சிங்கமும் நீள்புலியும் செழு மாலகரி யோடலறப்
பொங்கிய போர்புரிந்து பிளந் தீருரி போர்த்ததென்னே
செங்கயல் பாய்கழனித் திரு நாகேச் சரத்தானே.

திருவாசகம்

உள்ளன வேநிற்க இல்லன செய்யும்மை யல்துழனி
வெள்ளன லேனை விடுதிகண்டாய் வியன்மாத் தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கண் போதொலொட்டா
மெள்ளனவே மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும்பெனவே

— *மணிவாசகர்*

திருவிசைப்பா

போழ்ந்து யானைதன்னைப் பொருப்பன்
மகள்உமை அச்சம் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ் தட
மல்குசிற் றம்பலவன்
சூழ்ந்த பாய்புலித் தோல்மிசைத் தொடுத்து
வீக்கும் பொன்னூல் தன்னி னொடு
தாழ்ந்த கச்சதன்றே தமி
யேனைத் தளர்வித்ததே.

திருப்பல்லாண்டு

நிட்டையி லாஉடல் நித்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களு மேசிந்தித்து
அட்டமூர்த்திக்கு என்அகம் நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

மேவுபுனல் பொன்னியிரு கரையும் சார்ந்து
விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக்
காவுயரும் மயிலாடு துறையின் பொன்னிக்
கரைத்துருத்தி வேள்விகுடி எதிர்கொள்பாடி
பாவுறுசெந் தமிழ்மாலை பாடிப் போற்றிப்
பரமர் திருப் பதிபலவும் பணிந்து போந்தே
ஆவுறும்அஞ் சாடுவார் கோடிகாவில்
அணைந்துபணிந்து ஆவடுதண் துறையைச் சார்ந்தார்.

களியா னையின்ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா — *சேக்கிழார்*

பேரானை ஈருரிவைப் போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப் — பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாநா எல்ல உயிர். — *கபிலர்*

உற்றுரையாய் நன்னெஞ்சே ஓதக் கடல்வண்ணன்
உற்றுரையா வண்ணம்ஒன் றானானை — உற்றுரையா
யானை உரித்தானை அப்பனை எப்பொழுதும்
மானை உரித்தானை அடைந்து — *பரணதேவர்*

திருச்சிற்றம்பலம்

திருப்புகழ்

தருவூரிசை யாரமு தார்நிகர்
குயிலார் மொழி தோதக மாதர்கள்
தணியாமய லாழியி லாழவும் — அமிழாதே
தழலேமொழி கோரவி லோசன
மெறிபாசம காமுனை சூலமுள்
சமனார்முகில் மேனிக டாவினில் — அணுகாதே
கருவூறிய நாளமு நூறெழு
மலதேகமு மாவலு மாசைக
படமாகிய பாதக தீதற — மிடிதீரக்
கனிவீறிய போதமெய் ஞானமு
மியலார் சிவநேசமு மேவர
கழல்சேரணி நூபுர தாளிணை — நிழல்தாராய்

புருகூதன்நி னாளொரு பாலுற
சிலைவேடுவர் மானேரு பாலுற
புதுமாமயில் மீதணை யாவரும் — அழகோனே
புழுகார்பனிர் மூசிய வாசனை
யுரகாலணி கோலமென் மாலைய
புரிநூலுமு லாவுது வாதச — புயவீரா
மருவூர் குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமு மேபுனை — வளமுதூர்
மகதேவர்பு ராரிச தாசிவர்
சுதராகிய தேவசி காமணி
வழுவூரில்நி லாவியெ வாழ்வருள் — பெருமானே
தலைநா ளிற்பத மேத்தி அன்புற
உபதே சப்பொரு ளூட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி யென்றனை — அருளாலுன்
சதுரா கத்தொடு கூட்டி அண்டர்கள்
அறியா முத்தமி ழூட்டி முண்டக
தளிர்வே தத்துறை காட்டி மண்டலம் — வலமேவும்
கலைசோ திக்கதிர் காட்டி நன்சுடர்
ஒளிநா தப்பர மேற்றி முன்சுழி
கமழ்வா சற்படி நாட்ட முங்கொள — விதிதாவிக்
கமலா லைப்பதி சேர்த்து முன்பதி
வெளியா கப்புக ஏற்றி யன்பொடு
கதிர்தோ கைப்பரி மேற்கொளும்செயல் — மறவேனே
சிலாவீ ழக்கடல் கூட்ட முங்கெட
அவணோ ரைத்தலை வாட்டி யம்பர
சிரமா லைப்புக வேற்ற வுந்தொடு — கதிர்வேலா
சிவகா மிக்கொரு தூர்த்த ரெந்தையர்

வரிநா கத்தொடை யார்க்கு கந்தொரு
சிவாஞா னப்பொரு ளூட்டு முண்டக – அழகோனே
மலைமே வித்தினை காக்கும் ஒண்கிளி
அமுதா கத்தன வாட்டி யிந்துள
மலர்மா லைக்குழ லாட்ட ணங்கிதன் – மணவாளா
வரிகோ ழிக்கொடி மீக்கொ ளும்படி
நடமா டிச்சுரர் போற்று தண்பொழில்
வழுவூர் நற்பதி வீற்றிருந்தருள் – பெருமானே.


க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்

அம்புலிப் பருவம்

குழுவுடைய பதினாறு கலைவடிவு சிவன்முனம்
குறைவறக் கேட்டிடுதலால்
குளிரமுத மதிநிலவு புலவனென் றென்றுநற்
குவலயம் கொண்டாடலால்
வழுவையம் பலவனருள் பெற்றவன் என்னலால்
வானவர்கள் எந்தநாளும்
வளரிளங் குழவியென விசவநா தன்சடா
மகுடத்தில் விளையாடலால்
ஒழுகுமொளி யாலறிவி லிருளெலாம் நீக்கலால்
ஒப்பிலா இவனோடுனை
ஒப்பிட்டுரைப்பார்கள் கவிராச ராசர்கள்
உனக்கொத்த துணையிவன் காண்
அழகுவழு வூரினுறை உமைதரு குழந்தையுடன்
அம்புலீ ஆடவாவே
அனந்தகல் யாணகுண னெங்கள்கும ரேசனுடன்
அம்புலீ ஆடவாவே. – *ஸ்ரீ சிதம்பரநாத முனிவர்*


சிவலிங்கம்

சுயம்புலிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிட லிங்கம், மானுட லிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே சுயம்பு லிங்கமானது தானே தோன்றியது. காணலிங்கமானது விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கமானது இருடிகளால் தாபிக்கப்பட்டது. தைவிக லிங்கமானது அசுரர், இராக்கதர் முதலானவர்களால் தாபிக்கப்பட்டது. மானுட லிங்கமானது மனிதரால் தாபிக்கப்பட்டது. மானுட லிங்கத்தைவிட உயர்ந்தது ஆரிட லிங்கம். அதனின் உயர்ந்தது தைவிக லிங்கம். அதனின் உயர்ந்தது காண லிங்கம். இதன் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.





சிவபெருமான் பிஷாடனராக தோன்றும் காட்சி




திருமால் மோகினியாக தோன்றும் காட்சி



அய்யனார் (சாஸ்தா)

(சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் பிறந்த அய்யனார்)

நான்கு புறமும் சிமெண்ட் தலத்தால் ஆன அழகிய திருக்குளம்



சதர்ன் பிரிண்டர்ஸ், 11-A மகாதானத் தெரு, மயிலாடுதுறை - ☎ 23084